SWIS-H
STATEWIDE INFANT
SCREENING - HEARING



# என் குழந்தைக்கு 'முதல் செவித்திற திரைப் பரீட்சை' (hearing screen) செய்யப்படுவதில் எனக்கு விருப்பம் இல்லை என்றால் நான் தெரிந்துகொள்ள வேண்டிய விபரங்கள் என்ன?

உங்கள் குழந்தை பிறந்த முதல் சில வாரங்களில் தொடர்ச்சியான சில சோதனைகள் உங்கள் குழந்தைக்கு அளிக்கப்படும். காது கேட்கும் திறனில் உங்கள் குழந்தைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதா என அறிந்துகொள்ள முற்படுவது இச் சோதனைகளில் ஒன்றாகும்.

பிரசவத்திற்குப் பிறகு கூடிய விரைவில் இந்த முதல் செவித்திற திரைப் பரீட்சை செய்யப்படும். நீங்கள் மருத்துவமனையை விட்டு அகலுவதற்கும் முன்பு அல்லது அதற்குப் பிறகு மருத்துவமனையிலேயோ அல்லது உள்ளூர் சமூக மையம் ஒன்றிலோ இப் பரீட்சை செய்யப்படலாம்.

புதிதாய்ப் பிறந்துள்ள தமது குழந்தை இந்த முதல் செவித்திறன் திரைப் பரீட்சை உள்ளாவதற்கு பெற்றோர்கள் சம்மதிக்க விரும்பாமலிருக்கலாம். உங்களது குழந்தையின் 'நீலப் புத்தக'த்தில் இது குறிப்பிடப்படும். இச் சோதனை வேண்டுமா என உங்களிடம் கேட்கப்பட்ட போது நீங்கள் மறுத்துவிட்டீர்கள் என்பதை உறுதிப்படுத்தி படிவம் ஒன்றில் கையொப்பமிடுமாறும் நீங்கள் கேட்கப்படுவீர்கள்.

முதலாவதாகச் செய்யப்படும் செவித்திறன் திரைப் பரீட்சை உங்கள் குழந்தைக்குத் தேவையில்லை என்று நீங்கள் முடிவு செய்தாலும், இப் பரீட்சை மற்றும் இதன் முக்கியத்துவம் குறித்து உங்களுக்குத் தெரியப்படுத்துவது நலமாகும்.

## 'முதலாவது செவித்திறன் திரைப் பரீட்சை' (hearing screen) ஏன் அளிக்கப்படுகிறது?

பிறக்கும் 1000 குழந்தைகளில் ஏறத்தாழ ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு குறிப்பிடத்தக்க அளவில் காது கேட்கும் திறனில் இழப்பு ஏற்பட்டிருக்கும்.

உங்கள் குழந்தைக்கு சரியான அறிவுரை-ஆலோசனையும், உதவியும் வழங்கப்பட உதவும் வகையில் உங்கள் குழந்தைக்குக் காது கேட்கும் திறன் எந்த அளவிற்கு உள்ளது என்பதை கூடிய விரைவில் கண்டறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

தமது முதலாவது வார்த்தையை குழந்தைகள் பேசத் தொடங்கும்போது ஏறத்தாழ ஒரு ஆண்டு காலமாக நாம் பேசும் விதத்தினைக் குழந்தைகள் கேட்டுக்கொண்டிருந்திருப்பர்.

இந்த காலத்தில் குழந்தைக்குக் காது நல்ல முறையில் கேட்கவில்லை என்றால் அவர்களது பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி பாதிக்கப்படலாம்.

மேலதிகத் தகவல் தேவைப்பட்டாலோ அல்லது உங்கள் குழந்தைக்கு இப் பரீட்சை வேண்டுமென நீங்கள் மனம் மாறினாலோ கூடிய விரைவில் உங்களது உள்ளூர் SWIS-H திட்ட ஒருங்கிணைப்பாளருடன் தொடர்புகொள்ளுங்கள்.

## எனது குழந்தை வளர வளர நான் என்ன செய்யவேண்டும்?

நாட்கள் ஆக ஆக, செவித்திறன் ஒரே மாதிரியாக இல்லாமலும் இருக்கலாம். உங்கள் குழந்தையின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி ஆகியவற்றோடு, சப்தங்களைக் கேட்டு அவர்கள் புரியும் எதிர்ச்செயல்களையும் கண்காணித்துவர வேண்டியது முக்கியமாகும்.

உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ள சரிபார்ப்பு அட்டவணையைப் பாருங்கள்.

எதிர்காலத்தில் உங்கள் குழந்தையின் செவித்திறன் அல்லது பேச்சு மற்றும் மொழிவளர்ச்சி குறித்து உங்களுக்குக் கவலையாக இருந்தால், உங்கள் குழந்தையின் செவித்திறனை சோதித்துப் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை தயவு செய்து செய்யுங்கள்.

செவித்திறனை எந்த வயதிலும் சோதிக்கலாம்.

**மேலதிகத் தகவல்களுக்கு தயவு செய்து கீழ் வரும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்:**

http://www.health.nsw.gov.au/kids-families

உள்ளூர்த் தொடர்பு/சந்திப்புநேர விபரங்கள்

சுகாதார அறிவுரைக்காக *healthdirect Australia* –உடன் தொடர்புகொள்ளுங்கள்.
http://www.healthdirect.gov.au/
**1800 022 222**

NSW GOVERNMENT | Health

**Tamil** - I chose not to have my baby's hearing screened. What do I need to know?

SWIS-H
STATEWIDE INFANT
SCREENING - HEARING

# செவித்திறன் சோதனை குறித்த கீழ்வரும் விடயங்களைச் சரிபாருங்கள்

| | |
|---|---|
| பிறந்ததிலிருந்து 3 மாதங்கள் வரை | பெரும் சத்தங்கள் கேட்கும்போது குழந்தை எதிர்ச்செயல் புரியும் |
| | பழக்கப்பட்ட சத்தங்கள் அல்லது குரல்களைக் கேட்கும்போது அழாமல்அமைதியடையும் |
| | கூவுவது போன்ற ஒலிகளை ஏற்படுத்தும் |
| | குழந்தையுடன் யாராவது பேச்சுக் கொடுத்தால், பேசுபவரது முகத்தைக் குழந்தை பார்க்கும் |
| 3 – 6 மாதங்கள் | ஒலிகள் வரும் பக்கமாக கண்கள் அல்லது தலையைத் திருப்பும் |
| | பேசுவது போன்ற ஒலிகளை எழுப்பத் துவங்கும் |
| | தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் சிரிக்கும் அல்லது சத்தம் எழுப்பும். |
| 6 – 9 மாதங்கள் | 'அப்பா', 'அம்மா' 'பபா' போன்ற மழலை மொழி பேசும் |
| | மற்றவரது கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காக சத்தம் எழுப்பும் அல்லது குரல் கொடுக்கும் |
| | 'இல்லை' என்ற சொல்லுக்கும், குழந்தையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடும்போதும் மறுசெயல் செய்யும். |
| | பாடல் மற்றும் இசை ஆகியவற்றிற்கு மறுசெயல் புரியும் |
| 9 – 12 மாதங்கள் | மற்றவர்கள் பேசும் போது அதே போன்ற ஒலிகளை எழுப்பும் |
| | 'பந்து', 'நாய்' 'அப்பா' போன்ற சாதாரண வார்த்தைகளைப் புரிந்துகொள்ளும் |
| | மெல்லிய ஒலிகள் வரும் பக்கமாகத் தலை திருப்பும் |
| | தன் முதல் வார்த்தைகளைப் பேசத் துவங்கும் |
| 12 – 18 மாதங்கள் | ஒவ்வொரு வாரமும் குழந்தை புதுப் புது வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு வருவது போல தோன்றும் |
| | 'பந்தை இங்கே எடு,' என்பது போன்ற சாதாரணமாக சொல்லும் வேலைகளை செய்யும் |
| | மற்றவர்கள் கேட்கும்பொழுது ஆட்களையும், உடல் உறுப்புக்களையும் பொம்மைகளையும் சுட்டிக் காண்பிக்கும் |
| | தெளிவாக இல்லை என்றாலும், புதுப் பது வார்த்தைகளைத் தொடர்ந்து பேசி வரும் |
| 18 – 24 மாதங்கள் | தான் கற்றுக்கொண்ட 100 – 200 வார்த்தைகளைக் குழந்தை அடிக்கடி பயன்படுத்திவரும். |
| | சாதாரண கதைகள் மற்றும் பாடல்களைக் காது கொடுத்துக் கேட்கும் |
| | 'இன்னும் கொஞ்சம் வேண்டும்,' என்பது போன்ற இரண்டு அல்லது மூன்று வார்த்தைகள் கொண்ட சொற்றொடர்களை உருவாக்கும் |

குறிப்புகள்:

NSW GOVERNMENT | Health

© NSW Health September 2016 SHPN (NKF) 150277